SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, on account of the Panchayat enactment, the staff of the erstwhile Local Administration Department have been merged with the Revenue Department and the interests of the personnel in the erstwhile Local Administration Department have not been safeguarded. That is the general complaint. What are the safeguards given to the staff of the erstwhile Local Administration Department?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I request the hon. Member to put a separate question.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, கிராம சேவக்குகள் எந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். காங்கிரஸ் தியாகி என்ற அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : காங்கிரஸ் தியாகிகள் என்று நியமனம் செய்வதில்லை. மற்றவர்களைப் போலவே அவர்களும் நியமனம் செய்யப்பட இடம் உண்டு. ஆனால் அவர்கள் எல்லோரையும் ஒரு கமிட்டி தேர்ந்தெடுத்து, பின்னால் அவர்களுக்கு நீண்டகாலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அப்படி பயிற்சி பெற்றவர்கள்தான் கிராம சேவக்குகளாக நியமனம் செய்யப்படுகிறார்கள்.

திரு. கோ. சி. மணி : கிராம சேவக்குகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தியாகிகளாக இருந்தால் மட்டும் போதுமா ? வேறு எந்தத் தகுதியும் வேண்டியதில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் இந்தக் கேள்விக்குத் தான் சற்று முன் பதில் அளித்தேன். மேலும் அதை விளக்க வேண்டிய அவசியம் இல்லை. தமிழில்தான் சொன்னேன்.

Sugar Factories

* 34 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have any proposal to establish co-operative sugar factories during the Third Plan Period; and

(*b*) if so, where?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The target for co-operative sugar factories to be set up during the Third Plan Period is 4. Two of the units are being established, one in the Nilakottai taluk of Madurai district and the other in the Kallakurichi taluk of South Arcot district. The question of establishing the remaining two co-operative sugar factories is under consideration.

(அ) & (இ) மூன்றாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நான்கு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றில் ஒன்று மதுரை மாவட்டம், நிலக்கோட்டைத்

[7th August 1963]

தாலுகாவிலும், மற்றொன்று தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி தாலுகாவிலும் நிறுவ ஏற்பாடாகியிருக்கிறது. எஞ்சிய இரு ஆலைகள் நிறுவும் விஷயம் பரிசீலிக்கப்படுகிறது.

* 35 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கரும்பு சர்க்கரை ஆலைகள் எத்தனை உள்ளன?

(இ) எத்தனை ஆலைகளுக்கு கரும்பு உற்பத்திக்கு மத்திய சர்க்கார் போனஸ் கிடைத்துள்ளது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) நமது மாநிலத்தில் பத்து சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன.

(இ) கரும்பு உற்பத்திக்காக சர்க்கரை ஆலைகளுக்கு மத்திய சர்க்கார் போனஸ் எதுவும் கொடுப்பதில்லை.

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Ten sugar factories are in production in this State.

(*b*) The Government of India do not give any bonus to sugar factories for sugarcane production.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : தென்னாற்காடு மாவட்டத்தில் விருத்தாஜலத்திற்கு அருகில் பெண்ணாடத்தில் ஆரணி ஷுகர் பாக்டரி என்ற ஸ்தாபனத்தை மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக துவக்க ஏற்பாடு செய்தார்கள். அதற்கு அரசாங்கத்தின் பணம் 15 லட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பொது மக்களிடத்தில் இருந்து 6 லட்சம் வசூல் செய்திருக்கிறார்கள். அதற்கு லைசென்சு வழங்கப்பட்டும் இன்னும் துவக்கப்படாமல் இருக்கிறது. அதை அரசாங்கம் கவனித்து உடனடியாகச் சர்க்கரை ஆலையைத் துவக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்களா? அல்லது கூட்டுறவு ஸ்தாபனத்தின் மூலமாகவாவது அங்கே ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை துவக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பெண்ணாடம் சர்க்கரை ஆலை தனியாருக்கு வழங்கப்பட்டது. அதற்குச் சர்க்கார் பணம் கொடுக்க வில்லை. இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்டு கார்ப்பரேஷன் பணம் கொடுத்திருக்கிறார்கள். அதைத் துவக்குவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கிறது.

SRI R. V. SWAMINATHAN : May I know from the Hon. Minister whether the Government have considered the proposal to start a co-operative sugar factory at Manamadurai and if so, the action taken thereon?